[1986 மே 13

காக்களின் கம்பிகள் ஆகியவற்றை மாற்றி அமைக்கும் பணிக்காகவும் ரூபாய் 10 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால் முதற்கட்டமாக இத்திட்டத்தின் ஸ்தல வரைபடங்கள் , திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணி துவங்கப்படும்.''

6. கவன ஈர்ப்புகள்.

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவரி வசூல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், கோ. வீரய்யன், மா. மணிமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவரி வசூலில் வயல்களில் சிகப்புக் கொடி நட்டு அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதினால் அம்மாவட்ட விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சிறு உழவர்களிடமிருந்தும், வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் உழவர்களிடமிருந்தும் வலுக்கட்டாயமாக நிலவரி வசூலிப்பதில்லை என்ற அரசின் கொள்கை செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டுகளில் அடிக்கடி புயல் மற்றும் வறட்சியினால் பாதிக்கப்பட்டதினால் வரி வசூலில் ''மெதுவாகச் செல்லும்'' முறை தஞ்சை மாவட்டத்தில் பின்பற்றப்பட்டதினால் வருடாந்திர நில வருவாயின் கேட்பு சேர்ந்து கொண்டு வந்தது. நிலுவை ரூ. 12.59 கோடியாக உயர்ந்து விட்டது. கடந்த பசலி ஆண்டு 1394 இல் (1984–85) கேட்பு 21.07 கோடி ரூபாயில் ரூ. 7.72 கோடி மட்டும் வசூலிக்கப்பட்டது. அதுவும் கடந்த 12 பசலி ஆண்டுகளில் இதுவே அதிகபட்ச வசூலாகும். பசலி ஆண்டு 1395-ன் ஆரம்பத்தில்

அதாவது 1–7–1985 இல் நிலவரியின் நிலுவையின் கேட்பு ரூ. 13.99 கோடியாக இருந்தது. பசலி ஆண்டு 1395 நடப்பின் கேட்பு ரூ. 4.17 கோடியாகும்.

	(ரூபாய் கோடியில்.)
நிலுவையில் கேட்பு	13,99
நடப்பின் கேட்பு	4.17
மொத்தம் கேட்பு	18,16

நிலுவையின் கீழ் 1.40 கோடி ரூபாயும் நடப்பின் கீழ் ரூ. 1.35 கோடியும் ஆக மொத்தம் 2.75 கோடி ரூபாய் மட்டுமே 27–3–1986 வரை வசூலிக்கப்பட்டது. இது மொத்தத்தில் 15 சதவிகிதம் தான்.

2. மேலும், ரூ. 1,000-க்கும் இதற்கு மேலும் நிலவரி செலுத்தும் பெரிய நிலப்பட்டாதாரர்களிடமிருந்தும் மற்றும் பெரிய நிறுவனங்களிடமிருந்தும் வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவையிலும் நடப்பிலும், ரூபாய் 10 கோடிக்கு மேலாக இருக்கிறது என்று தஞ்சை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இவர்கள் போதிய வசதியிருந்தும் அரசின் 'மெதுவாக செல்லும்' கொள்கையை தங்களுக்குச் சாதகமாகக் கொண்டு நிலவரியை செலுத்த மனமில்லாது உள்ளனர். எனவே, பெரிய பட்டாதாரர்களிடம் நிலவரி வசூல் செய்யும் விஷயத்தில் நடவடிக்கை எடுப்பதென 1984 அக்டோபர் மாதத்தில் அரசு முடிவு செய்தது. அதன்படி, 10 ஏக்கருக்கு மேலாக நிலம் இருந்து 50 சதவீதமும் அதற்கு மேற்பட்டும் விளைச்சல் கிடைத்த விவசாயிகளிடமிருந்து நிலவரி வசூலிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. ஜப்தி நடவடிக்கையின் நோக்கத்தின்படி இத்தகைய விவசாயிகள் சிறு விவசாயிகளாகக் கருதப்பட மாட்டார்கள். நிலவருவாயை வசூலிப்பதில் சிறு விவசாயிகளிடம் இணங்கச்-செய்யும் (Persuasive) முறையை கடைப்பிடிக்குமாறு வருவாய் அதிகாரிகளை கேட்டுக் கொள்ளப்பட்டது. சம்பா மற்றும் தாளடியில் 10.13 இலட்சம் ஏக்கரில் இது வரை 8.84 இலட்சம் ஏக்கர் அறுவடை செய்யப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் அறுவடை ஏறக்குறைய முடிந்திருந்தும் நடப்பு கேட்பில் 50 விழுக்காடு கூட வசூலிக்கப்படவில்லை. இது, வரி வசூலிப்பதில் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற உண்மையை புலப்படுத்துகின்றது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 4–2–1985 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்திலே வ்வசாயிகள் சங்கத் தலைவர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டு, அதற்கு முன்னால் பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கின்ற நிலவரிக்கு வட்டி விதிப்பதில்லை என்றும், அதற்காக ஜப்தி செய்வதில்லை என்றும், விவசாயிகளைப் பொறுத்த வரையில் நிலுவையில் உள்ள நிலவரியில் பழைய நிலுவையில் ஒரு ஆண்டுக்கும், நடப்பாண்டில் உள்ள நிலவரிக்கும் என்று சேர்ந்து ஒன் பிளஸ் ஒன் என்ற அடிப்படையில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று 4–2–1985இல உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் அந்த உடன்பாட்டை அதிகாரிகள் மீறி, இந்த ஆண்டு மகசூலை ஜப்தி செய்யும் வகையில் நடவடிக்கைகளை எடுத்து விவசாயிகளைத் துன்பத்திற்கு ஆளாக்கியிருப்பதை அரசு உணர்ந்திருக்கிறதா ? அந்த உடன்பாட்டைச் சரியாக அமல் நடத்த வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, விவசாயிகளுக்கு விரோதமான இந்த நடவடிக்கைகளை எதிர்காலத்தில் கைவிடச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உடன்பாட்டினுடைய அடிப்படையிலே வசூலாக வேண்டிய அளவிற்குக்கூட அந்த நிலவரி வசூலாகவில்லை என்பதைத்தான் புள்ளிவிவரங்கள் நமக்குக் காட்டுகின்றன. நிலவரியின் நிலுவையின் கேட்பு ரூ. 13.99 கோடி; நடப்பின் கேட்பு ரூ. 4.17 கோடி; மொத்தம் கேட்பு ரூ. 18.16 கோடி. ஆனால், நிலுவையின் கீழ் 1.40 கோடி ரூபாயும், நடப்பின் கீழ் ரூ. 1.35 கோடியும் தான் ஆக மொத்தம் 2.75 கோடி ரூபாய்தான் வசூலாகியிருக்கிறது 27–3–1986 வரையில், ஆகவே, அந்த நிபந்தனையின் அடிப்படையில் வசூலாக வேண்டிய அளவிற்குக்கூட வசூலாகவில்லை. ஆகவே, கெடுபிடியாக இல்லை. கெடுபிடி ஆகாத அளவிற்குத்தான் வசூல் செய்ய வேண்டுமென்ற முறையில் செய்கிறோம். ஆனால், இந்த வரியைத் தர வேண்டியவர்களில் வசதி படைத்தவர்கள் தந்துவிட வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை. ஆகவே, ஏழை எளியவர்கள், மிகமிகச் சிறிய விவசாயிகள் கொடுமைப்படுத்தப்பட வேண்டுமென்பது அரசின் நோக்கம் அல்ல.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு அமல் நடத்துகின்ற விவசாயிகள் மீது கூட இந்த ஆண்டு மகசூலை ஜப்தி செய்கின்ற அளவிற்குக் கெடுபிடி நடத்தப்பட்டிருக்கிறது. கேட்புத் தொகை வசூலாயிற்றா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு அமல் நடத்திக் கொண்டிருப்பவர்களின் மீதே கூட கெடுபிடி வசூலில் அதிகாரி

கள் ஈடுபடுகிறார்களே, அது போன்ற நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அரசு முன் வருமா, அதற்கான உறுதிமொழி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடன்பாட்டின்படி நடைபெறாவிட்டால் அதுபற்றிக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் உடன்பாட்டின்படியேகூட வசூலாகவில்லை என்ற குறிப்புதான் வந்திருக்கிறது. உடன்பாட்டின்படி என்ன பாதுகாப்பைத் தர வேண்டுமோ அந்தப் பாதுகாப்பைத் தந்து, எந்த வகையிலே வசூல் செய்வதற்கு இயலுமோ அந்த வகையிலே வசூல் செய்யும்படியும், கெடுபிடி செய்ய வேண்டாமென்றுதான் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்தப் பாதுகாப்பு தரப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 13 கோடி ரூபாய் நிலுவை என்று சொல்லப்படுகிறது. ஒட்டுமொத்தமாக வெள்ளத்தின் காரணமாக அங்கேயுள்ள விவசாயிகளுக்கு 100 கோடி ரூபாய் வரையில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கரில் உற்பத்தி செய்வதற்கு 1,400 ரூபாய் செலவு செய்ய வேண்டியுள்ளது. வாய்தா 60 ரூபாய், 80 ரூபாய்க்குள்ளாகத்தான் இருக்கிறது. 1,400 ரூபாய் செலவு செய்கின்ற விவசாயிகள் 60 ரூபாய், 80 ரூபாய் என்று வாய்தாவில் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். கடந்த வெள்ளத்தின்போது நீங்கள் 13, 14 தாலுக்காக்களில்கூட இன்னும் அணாவாரி சர்ட்டிபிகேட் வழங்கப்படாததன் காரணமாகக் கூட்டுறவுச் சங்கக் கடன்களை வசூலிப்பதற்காகக் கெடுபிடி நடக்கிறது. எல்லா சாமான்களையும், அண்டா, குண்டா, குவளைகள் போன்றவைகளைக் கூட ஜப்தி செய்கிறார்கள். 250 ரூபாய்க்காக அண்டா, குண்டாக்களை ஜப்தி செய்கிறார்கள். தண்ணீர் குடிக்கக் கூடிய நிலைகூட இல்லாத அளவிற்கு சில வீடுகளில் ஜப்தி தொடர்ந்து நடக்கிறது. வாய்தாவைப் பொறுத்தவரையில் ஒட்டுமொத்தமாக 43 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 13 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது. தமிழகம் முழுவதும் ஒட்டுமொத்தமாக 43 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது. எனவே, அரசாங்கம் பெரிய மனது வைத்து, ஏற்கெனவே சிவில் சப்ளை இலாக்காவில்.....(மணியடிக்கப்பட்டது). ஆகவே, ரூ. 43 கோடியைப் பொருட்படுத்தாமல், அந்த ஒட்டு மொத்தமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், ஆண்டுக்காண்டு வறட்சி, வெள்ளம் இதுபோன்ற உபாதைகளால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு இந்த ரூ.13 கோடியைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது கூட்டுறவுக் கடன் வசூலிப்பு பொறுத்து அல்ல. நிலவரி நிலுவை வசூலைப் பொறுத்தது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும்கூட ரூ. 1,000, அதற்கு மேலும் நிலவரி செலுத்து பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து மற்றும் பெரிய நிறுவனங்களிடமிருந்து வசூலாக வேண்டிய நிலவரி மட்டும் ரூ. 10 கோடி என்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய வசதியிருந்தும்கூட, அரசு கொஞ்சம் மெதுவாக வசூலிக்கிறது என்பதைத் தங்களுக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு, கட்ட வேண்டியவர்கள் கூட கட்ட மறுக்கிறார்கள். பெரிய பட்டாதாரர்களாக இருப்பவர்களிடம் நிலவரி வசூல் செய்யும் விஷயத்தில், நிலவரி வசூல் செய்வதென அரசு முடிவெடுத்தது. அவர்களுக்குச் சலுகை தர வேண்டுமென்பதைவிட, ஏழை, எளியவர்களுக்கு இருப்பதைப் பற்றி நாம் கவனம் செலுத்தலாம். 10 ஏக்கர்களுக்கு மேல் நிலம் இருந்து, 50 சதவீதம் வரை விளைச்சல் கிடைத்த விவசாயிகளிடமிருந்து நிலவரி வசூலிப்பதிலே ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால், நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அப்படிப்பட்டவர்களும் தர மறுக்கிறார்கள். சென்ற ஆண்டிலே மட்டும் நாம் குறிப்பிட்டிருப்பது போன்று 10.13 இலட்சம் ஏக்கரில், 8.84 இலட்சம் விளைவு வந்து அறுவடையில் பெரும்பகுதி முடிந்து விட்டது. அதிலே 50 சதவீதம் கூட வசூலாகாமல் இருக்கிறது. ஏழை, எளியவர்களை பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் பற்றி கவனத்திலே வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், இவர்கள் கொடுமைப்படுத்தப்பட வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கிறோம். ஆனால், வசதி படைத்தவர்களிடத்திலே வசூலிக்கத்தான் வேண்டும். அவர்கள் கொடுமைப்படுத்தப்பட வேண்டுமென்பதல்ல. இந்த நில வரியை அவர்கள் முறைப்படி கொடுத்துவிட வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். ஆனால், கெடுபிடி செய்கின்ற தன்மையை உள்ளபடியே கடுமையாக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைப் பொறுத்தவரை, இன்றைக்கு அவர்களுடைய வரியைக் கட்ட வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி ஆராய, அரசாலே உயர்மட்டக் குழு போடப்பட்டு, அந்தக் குழு அரசுக்குப் பல அறிக்கைகள் தந்திருக்கிறார்கள். அவற்றின் மீது, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அறிவிக்காத காரணத்தாலே, அரசாங்கம் நிவாரணம் தரும் என்ற நம்பிக்கையோடு விவசாயிகள் இருக்கிற காரணத்தாலே, தொ

டர்ந்து அந்த நம்பிக்கைக்கு ஒரு முடிவு கொண்டு வராத காரணத்தாலே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் கிடைக்கும், என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். எனவே, அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு அறிக்கையை பரிசீலித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து, அடுத்து, என்ன என்ன உதவிகள் விவசாயிகளுக்கு அளிப்போம் என்ற உறுதியோடு அரசு முன்வந்தால், கட்டாயமாக, விவசாயிகள் எந்தவித நடவடிக்கைக்கும் தயாராக இருப்பார்கள். எனவே, அரசு உயர் மட்டக் குழு அறிக்கைகளைப் பரிசீலித்து, உடனடியாக அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன, என்ன சலுகைகளும் முறைகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரக் குறிப்புகளை நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், நிலவரியைப் பொறுத்தவரையில், 1931-லே வகுத்த வரியினுடைய அளவைத் தவிர, அதற்குப் பிறகு, ஏற்றமே இல்லை. வேறு எல்லாத் துறைகளிலும் ஏற்றம் இருந்தாலும் ஏற்றம் இல்லாத ஒரே துறை இதுதான். ஆனாலும், நான் முதலிலே சொல்லியபடி, வசதி படைத்தவர்களிடமிருந்து அப்படிப்பட்ட பாக்கியிருக்கிறது. அவர்கள் தங்களுக்கும் சேர்த்து, வரி வஜா கிடைக்கும் என்ற அளவுக்கு நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் சொல்கிறேனே தவிர, முடியாதவர்கள், நலிந்து போனவர்கள், மற்றவர்கள் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையின் பேரில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) திருவில்லிப்புத்தூர் கோவில் கோபுரம் துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலையைப் புகையினால் பாதிக்கப் பெற்றுள்ளதாக கூறப்படுவது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''காமராஜர் மாவட்டம், ஆலங்குளம் மற்றும் துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையினால் திருவில்லிப்புத்தூர் கோயில் கோபுரம் பெரிதும் பாதிக்கப்படுவதால் அப்பகுதி மக்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.